செய்தி வெளியீட்டு எண்.103 நாள்.16.02.2017

# திருவள்ளூர் மாவட்டத்தில் தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப. அவர்கள் தகவல்.

~~~~~

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரியில் உள்ள அரசினர் உலகநாத நாராயணசாமி கலை கல்லூரியில் மாணவர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டுதல் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் 24/02/2017 அன்று காலை 10.00 மணியளவில் நடைபெற உள்ளது. சிறப்பு வல்லுநர்கள் இக்கருத்தரங்கில் பங்கேற்று மாணவர்களுக்கு வழிகாட்ட உள்ளனர்.

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், திருவள்ளூர் மற்றும் அரசினர் உலகநாத நாராயணசாமி கலை கல்லூரி, பொன்னேரி இணைந்து நடத்தும் இக்கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் மாணவர்களும் பொது மக்களும் கலந்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப. அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~